# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN MARCH / APRIL – 2008

## ECS 1.21 – INTRODUCTION TO MACRO ECONOMICS

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) பிரதான பேரினப் பொருளியல் மாறிகளை அடையாளம் செய்து, அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பேரினப் பொருளியல் இலக்குகள் பரஸ்பரம் தமக்கிடையே எவ்வாறு முரண்பட்டுச் செல்கின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(10புள்ளிகள்)

02. (அ) உற்பத்தி வழியிலான தேசிய வருமானப் பெறுமதியானது செலவு வழியிலான தேசிய வருமானக் கணிப்பீட்டுப் பெறுமதிக்குச் சமமாக இருக்க வேண்டும் என்ற கூற்றை நீர் எவ்வாறு நியாயப்படுத்துவீர்? உமது விடையை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

i. நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி (GNP)

ii. மொத்த உண்ணாட்டு உற்பத்தி (GDP)

iii. தேசிய வருமானத்தின் இரட்டைக் கணிப்பீடு

iv. தேசிய வருமானக் கணிப்பீட்டில் உள்வாங்கப்படாத சேவைகள்

(12 புள்ளிகள்)

03. (அ) பழம் பொருளியலாளர்களின் பொருளாதாரச் சிந்தனைகளின் முக்கிய பண்புகளை இனங்கண்டு, விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பேரினப் பொருளியல் ஆய்வின் வளர்ச்சிக்குக் கெயின்ஸ் அவர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

04. ஒரு திறந்த பொருளாதாரம் தொடர்பான சில தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றன. இத்தகவல்களைப் பயன்படுத்தி கீழ்த்தரப்படுகின்ற வினாக்களுக்கு விடைதருக.

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| ரூபா 400 மில்லியன் | ரூபா 325 மில்லியன் |
| ரூபா 500 மில்லியன் | ரூபா 400 மில்லியன் |

தனியார் முதலீடு (I) ரூபா 100 மில்லியன்
அரச செலவீடு (G) ரூபா 70 மில்லியன்
நேர் வரிகள் (T) ரூபா 40 மில்லியன்

ஏற்றுமதிகள் (X) ரூபா 130 மில்லியன்
இறக்குமதிகள் (M) ரூபா 100 மில்லியன்

பின்வருவனவற்றை தருவிக்குக.

i. எல்லை நுகர்வு நாட்டப் பெறுமதி (02 புள்ளிகள்)

ii. நுகர்வுச் சமன்பாடு (02 புள்ளிகள்)

iii. சேமிப்புச் சமன்பாடு (02 புள்ளிகள்)

iv. சமநிலைத் தேசிய வருமானம் (04 புள்ளிகள்)

v. வருமானப் பெருக்கியின் பெறுமதி (02 புள்ளிகள்)

vi. இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் மட்ட தேசிய வருமானம் ரூபா 700 மில்லியன் ஆயின் அதனை அடைந்து கொள்ளத் தனியார் முதலீட்டை எந்தளவால் அதிகரிக்க வேண்டும். (04 புள்ளிகள்)

vii. உமது விடைகளைப் பொருத்தமான வரைபடத்தில் காட்டுக. (04 புள்ளிகள்)

05. (அ) பணத்திற்கான கேள்வி என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? உமது விடையை விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) பணநிரம்பல் தொடர்பான பின்வரும் எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.

i. குறுகிய பண நிரம்பல் (03 புள்ளிகள்)

ii. விரிந்த பண நிரம்பல் (03 புள்ளிகள்)

iii. உயர் வலுப் பணம் (04 புள்ளிகள்)

06. (அ) வணிக வங்கிகளின் கடனாக்கச் செய்முறையினை எண் உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) ஒரு மத்திய வங்கியின் பல்வேறு கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

07. (அ) வேலையின்மை தொடர்பான பின்வரும் எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.

i. இச்சையுள்ள வேலையின்மை
ii. மறைமுக வேலையின்மை
iii. உராய்வு வேலையின்மை
iv. இச்சையற்ற வேலையின்மை

(04 x 03 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் 1990 இற்குப் பின்னர் வேலையின்மையின் பண்புகள் அதன் போக்கு என்பன பற்றிச் சுருக்கக் குறிப்புகள் தருக. (08 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்குச் (04)** சிறு குறிப்பெழுதுக.

i. பின்பழம் பொருளியலாளர்கள் (Neo Classical Economists)

ii. மொத்தத் தேசிய உற்பத்தியிற் பெறுமானத் தேய்வு

iii. செலவுத் தூண்டற் பணவீக்கம்

iv. கெயின்சின் திரவப் பொறி (Keynesian Liquidity Trap)

v. சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கும் அதன் கூறுகளும்

(தலா 05 புள்ளிகள்)

*****